**செய்தி வெளியீடு எண்: 523** **நாள்: 09.08.2017**

# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

தொடர்விடுமுறை நாட்களை முன்னிட்டு 11.08.2017-அன்று ஆம்னி பேருந்துகளில் பயணிக்கவுள்ள பயணிகளிடமிருந்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் வழக்கத்திற்கு மாறாக அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுவதாக தொடர்ந்து பொதுமக்களிடமிருந்து புகார்கள் பெறப்படுகின்றன. இப்புகார்கள் மின் இணையதளம் மூலமாக உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, வழக்கத்திற்கு மாறாக ஏற்கனவே இணைய தளம் மூலமாக வசூலிக்கப்பட்ட அதிகக் கட்டணத்தை உரிய பயணிகளிடம் திரும்ப வழங்கிட ஆம்னி பேருந்து உரிமையாளர்களை மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்.

வழக்கத்திற்கு மாறாக அதிகக் கட்டணம் வசூலித்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். அவ்வாறாக வசூலிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டால் சம்பந்தப்பட்ட ஆம்னி பேருந்து உரிமையாளர் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஆம்னி பேருந்து உரிமையாளர்களை மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்.

அதிகக் கட்டணம் வசூலிக்கும் ஆம்னிப் பேருந்துகள் மீது பொதுமக்கள் தங்களது புகார்களைத் கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 425 6151 வாயிலாகத் தெரிவிக்கலாம். அப்புகார்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைச் செயலர் /போக்குவரத்து ஆணையர்,
சென்னை - 5.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**